பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 3 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 7 திங்கட்கிழமை (23-08-1993) UTHAYAN—A Lively National Tamil Daily இதழ் 268

## இரு தமிழர் கைது

யாழ்ப்பாணம், ஆக 23

மட்டக்களப்பு மாவட்டம் ஆண்டான்குளம் பகுதியில் மதுரங்குளம் என்னுமிடத்தில் வைத்து இரு தமிழ்ப் பொது மக்களை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் நடுக்குடியிருப்பு பளிஞ்சிசேனையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

# கெற்பலியில் ஷெல் வீச்சுக்கு இரு பெண்கள், குழந்தை பலி

## நேற்றுப் பிற்பகலில் சம்பவம்

தென்மராட்சி, ஆகஸ்ட் 23

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் பூநகரி முகாம் பகுதியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் கிளாலி கெற்பலி பண்டிதர் குடியிருப்புப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் இரண்டு பெண்களும் ஒரு குழந்தையும் அந்த இடத்திலேயே பலியானார்கள்; மற்றும் சிலர் காயமடைந்தனர்; இரு வீடுகள் சேதமடைந்தன.

பண்டிதர் குடியிருப்பில்—அகதிகள் குடியேற்றப் பகுதியிலேயே—படையினரின் எட்டுக்கும் அதிகமான ஷெல்கள் விழுந்து வெடித்தன.

நேற்று பிற்பகலில் கிளாலிக் கடற்கரைக்கு அண்மித்துக் காணப்பட்ட படையினரின் படகுகள் இவைற்றிலிருந்து கரையோரப் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் கரையில் நின்ற ஐந்து படகுகள் சேதமடைந்தன. கிளாலிக் கரை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளின் உறவினர் மீண்டும் யாழ். வருவர்!

கொழும்பு, ஆக. 23

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகளின் விடுதலை தொடர்பாகவும், தமது பிள்ளைகளை பார்வையிடவும் யுத்தக் கைதிகளின் பெற்றோர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர்.

யுத்தக் கைதிகள் பெற்றோர் அமைப்பின் செயலாளர் திரு. ஏ. பக்குபிட்டிய இத்தகவலை கொழும்பில் தெரிவித்துள்ளார்.

தாம் யாழ்ப்பாணம் செல்வதற்கான ஆயத்தங்களை தற்சமயம் செய்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எப்போது, எந்த வழியில் யாழ்ப்பாணம் செல்வது என்ற விவரங்களை அவர் வெளியிடவில்லை. (உ-173-3)

## கைதிகளின் பெற்றோர்கள் சிறிமாவைச் சந்தித்தனர்!

கொழும்பு, ஆக. 23

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலுள்ள யுத்தக் கைதிகளின் பெற்றோர்கள் அடங்கிய தூதுக் கோஷ்டி ஒன்று எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை அண்மையில் சந்தித்தது.

தமது பிள்ளைகள் 32பேரையும் மீட்டுத் தருமாறு அவர்கள் திருமதி பண்டாரநாயக்காவிடம் கோரிக்கை விடுத்தனர்.

நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவியின் அலுவலகத்தில் இச்சந்திப்பு நிகழ்ந்தது. எதிர்க்கட்சி எம்.பிகளான லே. சுரேஷ் பிரேமச்சந்திரன், தர்மசிறி சேனநாயக்கா, ரிச்சர்ட் பத்திரன, கே. பி. இரத்நாயக்கா ஆகியோரும் உடன் இருந்தனர்.

பொருளாதாரத் தடையினால் யாழ்ப்பாண மக்கள் படும் துயரங்கள் பற்றியும் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவ

(6ஆம் பக்கம் பார்க்க)

## 1991- 92 கல்வி ஆண்டுக்கு

## யாழ். பல்கலைக் கழகத்துக்கு போதிய மாணவரைத் தெரிவதில் சிக்கல்

### வெட்டுப் புள்ளி வெளிவருவது தாமதமாகும்

யாழ்ப்பாணம், ஆக. 23

1991 – 1992 ஆம் கல்வி யாண்டுக்கு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப் புள்ளிகள் வெளிவருவது தாமதமாகும் என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு தேவையான எண்ணிக்கையுள்ள மாணவர்களை அனுமதிக்க முடியாத நிலை தோன்றியுள்ளதை அடுத்தே வெட்டுப்புள்ளியை வெளியிடுவது தாமதமாவதாக தெரிய வந்துள்ளது.

1991ஆம் ஆண்டில் வடக்கு-கிழக்குக்கு வெளியே ஆகஸ்டில் வழமையான ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையும்—

வடக்கு, கிழக்கில் 1992 ஏப்ரலில் ஜி. சி ஈ. உயர்தர விசேட பரீட்சையும் நடைபெற்றன என்பது தெரிந்ததே.

இந்த இரண்டு பரீட்சைகளிலும் தோற்றி சித்தியடைந்த மாணவர்களே அடுத்துவரும் கல்வியாண்டில் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்படவிருக்கிறார்கள்.

நீதிமன்றத் தீர்ப்பு

அண்மையில் உயர்நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பின்படி—

மேற்படி இரு பரீட்சைகளையும் பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக ஒன்றாகக் கருதவேண்டும்.

ஆனால் 1991 ஆகஸ்டில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு மக்களின் கஷ்டம் எதிரணியினருக்கு விளக்கம்

### கைதிகளின் உறவினர்கள் விவரிப்பு

கொழும்பு, ஆக. 23

''யாழ். குடாநாடு மீது அரசு விதித்துள்ள பொருளாதாரத் தடையால் அப்பாவி மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்''.

யாழ்ப்பாணம் வந்து திரும்பிய, யுத்தக் கைதிகளின் பெற்றோர் கொழும்பில் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா உட்பட மற்றும் எதிர் கட்சி உறுப்பினர்களை அண்மையில் சந்தித்த சமயமே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

யுத்தக் கைதிகளின் பெற்றோர் அடங்கிய தூதுக்குழுவினர் யாழ். மக்களின் துன்ப துயரங்களையும் எதிரணியினருக்கு எடுத்து விளக்கினர்.

''பொருளாதாரத் தடை காரணமாக யாழ்ப்பாண மக்கள் படும் துன்பத்தை நாங்கள் அங்கு தங்கி இருந்த 54 நாட்களிலும் நேரில் அவதானித்தோம்.

''எதிர்கட்சியினராகிய நீங்களும் பொருளாதாரத் தடையை விதிக்குமாறு கோருகிறீர்கள். ஆனால் இதனால் அப்பாவி மக்களே பாதிக்கப்படுகிறார்கள்'' — இவ்வாறு கைதிகளின் பெற்றோர் தெரிவித்தனர். (உ-3)

## பூநகரிப் பாதை விவகாரம்:

## ஐ. நா. அதிகாரிகளின் முயற்சி பயனளிக்கக் கூடிய நிலையில்?

கொழும்பு, ஆக. 23

சேரதீவு — பூநகரிப் பாதையைத் திறப்பது சம்பந்தமாக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் எடுத்துவரும் முயற்சி பலனளிக்கக்கூடிய நிலை உருவாகி வருவதாக கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கென ஐ. நா. தூதரகத்துக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் ஓர் ஒப்பந்தமும், ஐ. நா. தூதரகத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஓர் ஒப்பந்தமும் தனித்தனியாகக் கைச்சாத்திடப்படும் என்ற விஷய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் குண்டுவீச்சு

யாழ்ப்பாணம், ஆக. 23

மன்னார் பகுதியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இரண்டு புக்காரா விமானங்கள் இரு வேறு இடங்களில் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

பரப்புக்கடந்தான் பகுதியில் முதலாவது தாக்குதல் நடத்தப்பட்டது. பரப்புக்கடந்தான் காட்டுப்பகுதியில் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன.

அடுத்து கட்டையடம்பன் பகுதியில் குண்டுவீச்சு இடம்பெற்றது. அங்குள்ள காட்டுப் புறங்களிலும் குண்டுகள் வீசப்பட்டன.

இவ்விரு சம்பவங்களிலும் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை. (ஒ-3)

## படகு ஓட்டுநர்களுக்கு விசேட அடையாள அட்டை

யாழ்ப்பாணம், ஆக. 23

கிளாலி — பூநகரிப் படகுச் சேவையில் ஈடுபட்டுவரும் படகு ஓட்டுநர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்க இருப்பதால்—

சகல படகுத்துறைப் பொறுப்பாளர்களையும் படகு உரிமையாளர்களையும் ஓட்டுநர்களையும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு புலோப்பளை பயணிகள் படகுத்துறைச் செயலகத்திற்கு தவறாது வருகை தருமாறும்—

வரும்போது படகுச்சேவையில் பாவிக்கப்படும் வெளியிணைப்பு இயந்திரங்கள் மற்றும் சகல உபகரணங்களையும் எடுத்து வருமாறும்—

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட நிதித் துறைப் பொறுப்பாளர் லெப். கே. தமிழ்க்குமரன் கேட்டுள்ளார். (ஒ-3)

## கிளாலி படகு சேவை நாளை

யாழ்ப்பாணம், ஆக. 23

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை நாளை செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## இயக்கச்சியில் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஆக. 23

இயக்கச்சிப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் மோதல் இடம் பெற்றது.

இம்மோதலின்போது விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான கப்டன் அன்பு [illegible] மம்) வீரச்சாவு அடைந்தார். (ஒ-3)

## ஜப்பான் சமாதானக் குழு மட்டுநகருக்கு விஜயம்

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த அமைதிக்கும் சமாதானத்துக்குமான சபையின் மூவர் கொண்ட பிரதிநிதிகள் குழு ஒன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்தது.

இக்குழுவினர் உலக சமாதானத்துக்காக செயற்பட்டு வருபவர்கள் எனக் கூறப்படுகிறது.

கிழக்கு மாகாண நிலைமைகள் குறித்து இக்குழுவினர் ஆராய்ந்தனர் என்றும், இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அவர்கள் பார்வையிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு பல்கலையில் ஜனவரியில் மருத்துவபீடம்

மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மருத்துவ பீடத்தை இயக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவ பீடத்துக்கான ஆய்வு கூடங்கள் அமைக்கும் வேலைகள் தற்போது நடைபெற்றுவருவதாகவும்—

மருத்துவபீட மாணவர்கள் தமது பயிற்சியை மேற்கொள்ள வசதியாக மட்டக்களப்பு வைத்தியசாலை போதனா வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

1992 ஆம் ஆண்டு நடந்த ஜி.சி.ஈ. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் இருந்து முதல் தொகுதி மாணவர்கள் இந்த மருத்துவ பீடத்துக்கு அனுமதிக்கப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## தமிழகத்திலிருந்து திரும்பிய அகதிகளைத் தீவுப்பகுதிக்கு அனுப்ப அரசு முயற்சி!

யாழ்ப்பாணம், ஆக. 23

தமிழகத்தில் இருந்து திருகோணமலை திரும்பியுள்ள அகதிகளில் ஒரு பகுதியினரை தீவுப்பகுதியில் குடியேற்ற அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலைக்குத் திரும்பியுள்ள அகதிகளில் கணிசமானோர் தீவுப்பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் —

அவர்களை ''நரோமா'' கப்பல் மூலம் இவ்வாரம் முதல் தீவுப்பகுதிக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த அகதிகள் குடும்பங்களை தீவுப் பகுதியில் சென்று குடியேற விருப்பமா என கேட்கப்பட்டதாகவும் —

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு சென்றால் பாதிக்கப்படுவீர்கள் என அகதிகள் படை அதிகாரிகளால் மிரட்டப்பட்டதாகவும் மேலும் தெரியவந்தது.

அதேவேளை —

அகதிகளில் ஒரு தொகுதியினர் வவுனியாவுக்கும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (உ-3)

## அகதிகள் திருமலையில் பெரும் கஷ்ட நிலையில்!

யாழ்ப்பாணம், ஆக. 23

தமிழகத்தில் இருந்து திரும்பிய அகதிகள் அடிப்படை வசதியின்றி பெரும் கஷ்ட நிலையில் திருகோணமலை நிலாவெளியில் தங்கியுள்ளனர் என்று அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரிகளால் நிலாவெளியில் அமைக்கப்பட்டுள்ள 150 கொட்டில்களில் அவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் —

அடிப்படை வசதிகளான மலசல கூடம் மற்றும் சுகாதார வசதிகள் அவர்களுக்கு அங்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது.

பெரும்பாலான அகதிகள் படுக்க வசதியின்றி புல் தரைகளில் உறங்குவதாகவும் —

வெய்யிலின் கொடுமையால் அவர்களில் பலர் கண்நோய் வயிற்றோட்டம் போன்ற தொற்று நோய்களுக்கு ஆளாகியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)


இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில்

மேடையேறுகிறது

தமிழீழ விடுதலைப் புலிகள்
கலைபண்பாட்டுக் கழக ஆதரவில்

“களத்தில் காத்தான்”

எழுச்சிப் பாடகன் S. G. சாந்தனின் மைந்தன
பிரபுராஜ் பாலகாத்தானாக காளிகோயிலடி
இளைஞர்களுடன் இணைந்து வழங்கும்

“காத்தவராயன்”

காலம்:
23-08 93 (இன்று) மாலை 6 மணி

பிரவேசம்: 10/-, 20/-

ஒளி: மனோ லைற்
ஒலி: தொம்ஸ் சவுண்ட்ஸ்ன்

(27039)



கண்ணீர் அஞ்சலி

திருமதி தனலட்சுமி குமாரசாமி

கோண்டாவில் சி. சி. த. க. பாடசாலை ஆசிரியை திருமதி தனலட்சுமி குமாரசாமி அவர்கள் 22-08-93 அன்று சிவபதம் அடைந்தமை எமக்குப் பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து எமது கண்ணீர்ப் பூக்களைச் சமர்ப்பிக்கிறோம். அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

(27042)


## இன்று

மந்திகை கருப்பன் சனசமூக நிலையத்தில் 18ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். (த-109)

## விடைத்தாள் குமண மூலம் அனுப்பப்படும்

யாழ்ப்பாணம், ஆக. 23

தற்சமயம் நடைபெறும் ஜி.சி.ஈ (உயர்தர) பரீட்சையின் விடைத்தாள்களில் இரண்டாவது தொகுதி எதிர்வரும் 26 ஆம் திகதி ''குமண'' கப்பல் மூலம் திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்படவிருக்கிறது.

பிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கமும் விடைத்தாள்களுடன் கொழும்பு செல்கிறார். (உ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3-45 மணி:- றோயல் எதிர் யுத்கார்மல்

★ 5-00 மணி பாடும்மீன் 'I' எதிர் ஸ்ரோக்ட் ஸ்ரார்

o o o

புன்னாலைக்கட்டுவன் கலைவாணி விளையாட்டுக் கழகம் உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தும்—9 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான— உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று ஆரம்பமானது. இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3-45 மணி:- சுழிபுரம் சத்தியா ''ஏ'' அணி எதிர் புத்தூர் வளர்மதி ''பி'' அணி

★ 4 45 மணி:- திருமலை நட்சத்திரம் ''ஏ'' அணி எதிர் மயிலிட்டி ஒற்றுமை ''ஏ'' அணி.

o o o

யாழ். கைலாஸ் விளையாட்டுக் கழகம் 15 வயதுக்குட்பட்டோர் பிரிவில் — 6 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான—5 ஓவர் மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடர் ஒன்றை நடத்தவிருக்கிறது.

இப்போட்டிக்கான விண்ணப்ப முடிவு தினம் இம்மாதம் 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையாகும். அடுத்து வரும் வெள்ளிக்கிழமை — செப்டெம்பர் 3 ஆம் திகதி — பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் கைலாச பிள்ளையார் கோயில் மைதானத்தில் அணி ஒழுங்குத் தெரிவு இடம்பெறும்.

விண்ணப்பப்படிவங்களை நாவலர் வீதி, அபர்ணா தையல் நிலையத்துக்கு அருகில் உள்ள சைக்கிள் திருத்தும் நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### சாகித்திய விழாவில் பரிசு பெறுவோர்

கொழும்பு, ஆக. 23

கொழும்பில் நடைபெறும் தேசிய தமிழ் சாகித்திய விழாவில் இலக்கிய, தமிழியல் துறைகளுக்கான விருதுகளைப் பெறுவோர் பற்றிய விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

விருது பெறும் சிலரின் விவரம் வருமாறு;

க. சொக்கலிங்கம் (சொக்கன்), டொமினிக் ஜீவா, இ. முருகையன்— இலக்கிய செம்மல் விருதையும், க குணராசா (செங்கை ஆழியான்) தமிழ் ஒளி விருதையும்,

க வேலானந்தன் - கலைச் செம்மல் விருதையும், என். குமரகுரு, எம். மோகன்ராஜ் —கலாஜோதி விருதையும், ... விருதையும் பெறுகின்றனர். (த-178)

## புதிய சட்டத்தின் எதிரொலி: ஜேர்மன் செல்லும் அகதிகள் எண்ணிக்கை குறைந்தது

ஜேர்மனிக்கு செல்லும் அகதிகளின் எண்ணிக்கை புதிய குடிவரவுச் சட்டத்தின் காரணமாக வெகுவாகக் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்னர் தினமும் சுமார் 200 வெளிநாட்டு அகதிகள் பிராங்போர்ட் விமானநிலையத்தில் சென்று இறங்கினர் என்றும் —

புதிய சட்டம் காரணமாக அந்தத் தொகை 30 ஆகக் குறைந்துவிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

புதிய சட்டம் அமுலுக்கு வந்த பின்னர் ஜேர்மனிக்கு வரும் அகதிகள் விமான நிலையத்தில் வைத்தே விசாரணை செய்யப்படுகின்றனர். விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட அகதிகள் அவர்களின் சொந்த நாடுகளுக்கு விமான நிலையத்தில் வைத்தே திருப்பி அனுப்பப்படுகிறனர் என்பது தெரிந்ததே. (ஒ.எ)

## அ.தி.மு.க. - காங்கிரஸ் தொண்டர்கள் மோதல்

### மதுரையில் சம்பவம்

சென்னை, ஆக. 23

மதுரை ரயில் நிலையத்தில் நேற்று மாலை அ. தி. மு. க. தொண்டர்களுக்கும் காங்கிரஸ் தொண்டர்களுக்கும் இடையில் நடந்த மோதலில் அ.தி.மு.க. தொண்டர்கள் இருவரும், பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் காயமடைந்தனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியையும், அ.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ராஜன் செல்லப்பாவையும் வரவேற்க அவர்களது கட்சிக்காரர்கள் ரயில்நிலையம் வந்த சமயமே இம்மோதல் இடம் பெற்றது.

காயமடைந்தவர்கள் உடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (உ-8)

## யாழ். நகரில் விரைவில் விடுமுறை காலச் சந்தை

யாழ்ப்பாணம், ஆக. 23

யாழ்நகரப் பகுதியில் விடுமுறைகாலச் சந்தை இரண்டு மாத காலத்தினுள் யாழ் மாநகரசபையால் திறந்து வைக்கப்பட உள்ளது.

முன்னைய யாழ். பஸ் நிலையம் அமைந்திருந்த இடத்திற்கு அண்மையில் — மின்சார நிலைய வீதியில் தற்போது கட்டி முடிக்கப்பட்ட நிலையில் உள்ள மலசல கூடத் தொகுதிக்கு பின்பாக உள்ள — காணிப் பரப்பிலேயே இச்சந்தை அமைக்கப்படவுள்ளது.

சனிக்கிழமையில் பிற்பகல் 2 மணிக்கு பின்னதாகவும் ஞாயிறு, பௌர்ணமி மற்றும் வர்த்தக விடுமுறை நாட்களில் முழுநேரமாகவும் இந்த விடுமுறை கால சந்தை இயங்கும்; ஒவ்வொன்றும் 60சதுர அடி கொண்டதாக இங்கு கடைகள் அமைக்கப்படும். மேற்குறிப்பிட்ட நாட்களில் இக் கடைகள் வீதியோர வியாபாரிகளுக்கும் ஏனைய வியாபாரிகளுக்கும் வாடகைக்கு கொடுக்கப்படும்.

விடுமுறை நாட்களிலும் யாழ். நகருக்கு வரும் பொது மக்கள் தமக்கு தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்ள வசதியாகவும் —

வீதியோர வியாபாரத்தை அறவே இல்லாமல் செய்யும் நோக்கத்துடனும் இச்சந்தை திறக்கப்பட உள்ளதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-162)

## மலையக முன்னணி செயலர் பொலீஸாரால் சித்திரவதை

### நீதிமன்றில் அவரே தகவல்

கொழும்பு, ஆக. 23

மலையக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் பாவா அப்துல்காதர், தாம் பொலீஸ் விசாரணையின் போது கடுமையாகச் சித்திரவதை செய்யப்பட்டதாக நீதிமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தமக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்கில் சாட்சிக் கூண்டிலிருந்து சாட்சியமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

பாவா அப்துல்காதர் பொலீஸ் விசாரணையின் போது அளித்ததாகக் கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தை அவருக்கு எதிரான சாட்சியமாக ஏற்றுக் கொள்ளலாமா என்பது குறித்து ''வொயர் டயர்'' விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்றுவருகிறது.

அந்த விசாரணையின் போது அப்துல் காதர் மேலும் கூறியதாவது:-

வரதனைப் பற்றியும் விடுதலைப் புலிகள் பற்றியும் கேட்டு என்னைப் பொலீஸ் அதிகாரிகள் தாக்கினர்.

ஜே.ஓ.சி. குண்டுவெடிப்பு, ரஞ்சன் விஜேரத்தின கொலை ஆகியவை பற்றி வரதன் ஏதும் கூறினாரா என்று கேட்டு என் தலைமயிரைப் பிடித்து தலையைச் சுவருடன் பல தடவைகள் மோதினார்கள்; ஆம் என்று சொல்லும் வரை மாறி மாறி தலையிலும் மார்பிலும் அடித்தார்கள்.

ஆனால் வரதனை ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் எனக்கு முன்பே தெரியும். குண்டு வெடிப்பு நடந்த ஜூன் 21 ஆம் திகதிக்குப் பின்னர் நான் அவரை பார்க்கவில்லை.

பொலீஸ் அதிகாரி லயனல் குணதிலக சொல்லியபடி நான் அணிந்திருந்த ரீ-சேர்ட்டைக் கழற்றி அதனால் என் கண்ணைக் கட்டி, கைவிலங்கு போட்டுவிட்டு என்னைத் தொடர்ந்து அடித்தார்கள்.

கை, கால்களில் மாறிமாறி அடி விழுந்தன. நான் கீழே விழுந்தேன்.

''எஸ்-லோன்'' பைப் உடைந்து விட்டது. பட்டனால் (குண்டாந் தடியால்) அடி'' என்று யாரோ சொன்னார்கள் நான் மயங்கிப் போனேன்.

மறுநாள் வாகனத்தில் போட்டு எங்கோ கொண்டு போனார்கள் அங்கு கால்களுக்குக் குறுக்காக கயிற்றால் கட்டி தொங்கவிட்டு அடித்தார்கள். சுதந்திரக் கட்சி எவ்வளவு பணம் கொடுத்தது என்று கேட்டார்கள் அரசியல் தொடர்புகளைக் கூறினேன்.

என்னை வைத்து அடித்த இடம் தெமட்டகொடை பொலீஸ் நிலைய பதிவு அறை என்பதை பின்னர் அறிந்து கொண்டேன்.'' — என்றார் (உ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீராவோடையில் மோதல்

மட்டக்களப்பு மீராவோடையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட எதிர்பாராத மோதல் ஒன்றில் போராளி ஒருவரும், முழுநேர ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவு அடைந்தனர்.

இரண்டாம் லெப்டினன்ட் நவநீதன் அல்லது குகதாஸ் (பிள்ளையார் பத்மநாதன் - கிரான்). ஆதரவாளரான கிருஷ்ணபிள்ளை கீதப்பிரியன் (கிண்ணியடி) ஆகியோரே வீரச்சாவு அடைந்தவர்கள் ஆவர். [ஒ]

உலக ஒத்துழைப்புக்கான சர்வதேச சபைக்கு

# இனப்பிரச்சினை பற்றி ஜனாதிபதி கூறிய பதில் அதிர்ச்சி அளிக்கின்றது

## மலையக மக்கள் முன்னணி அறிக்கை

கொழும்பு, ஆக 23

உலகளாவிய ஒத்துழைப்புக்கான சர்வதேச சபை இலங்கையின் அமைதிக்கான முயற்சிக்குப் புதுவடிவம் கொடுக்கவும், யுத்தத்தை உடனடியாக இடை நிறுத்தவும் சில ஆலோசனைகளோடு முன்வந்த போது —

வடக்கு - கிழக்கில் நிலவும் பிரச்சினை இனப்பிரச்சினை அல்ல. அது பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே என்று ஜனாதிபதி சார்பில் தெரிவிக்கப்பட்டமை அதிர்ச்சி அளிக்கின்றது.

மலையக மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தொடர்ச்சியான யுத்தத்தால் வடக்கு - கிழக்கு மக்கள் அனுபவிக்கும் துயரங்களை கண்டு கொள்ளாமல் பயங்கரவாதிகளை நிராயுதபாணிகளாக்குவது என்ற தோரணையில் பதில் கூறுவது சகல மக்களின் நலனுக்கும் உத்தரவாதம் அளிக்க வேண்டிய அரசு - தனது பொறுப்பிலிருந்து அசட்டைத் தனத்தோடு நழுவுவதாகவே அமைந்துள்ளது.

வடக்கு - கிழக்கில் இனப்பிரச்சினை கிடையாது என்றால் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏன்? நாடாளுமன்ற தெரிவுக்குழுவை ஏற்படுத்தி பல வருடங்களாக அவர்களின் முடிவில் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தது ஏன்? இப்போதும் கூட பேச்சு வார்த்தை சமரசம் என்று அரசு சார்பில் பேசப்படுவது ஏன்?

இவ்வாறு அதில் கேட்கப்பட்டுள்ளது. (த-173)

## ஆலயங்களில்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமான் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தேர்த் திருவிழா அடுத்த மாதம் 8ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா 9ஆம் திகதியும் நடைபெறும். (க-161)

o o o

வண். வடமேற்கு பிரப்பம்பதி தான்தோன்றி ஸ்ரீ ஞான வைரவர் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் இன்று திங்கள் காலை 8-15மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

நண்பகல் அன்னதானமும் இரவு 7மணிக்கு சுவாமி வீதிவலம் வருதலும் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து விசேட மேளக்கச்சேரியும், ராஜன்ஸ் இசைக் குழுவின் இசை நிகழ்ச்சியும் இடம் பெறும் (த)

o o o

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வரும் யாழ். குருநகர் புனித ஆரோக்கிய நாதர் ஆலய வருடாந்த திருநாளில் எதிர்வரும் 26ஆம் திகதி மாலை 4-30 மணிக்கு சுற்றுப் பிரகார ஆராதனை சுற்றுப் பிரகாரம் ஆகியவை இடம்பெறும்.

மறுநாள் 7மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலியை யாழ். பேராலய பங்குத் தந்தை வண. அன்ரன் இராசநாயகம் நடத்துவார். அதனைத்தொடர்ந்து திருச்சொருப பவனி நடைபெறும். (த 51)

o o o

பருத்தித்துறை மருதடி ஞான வைரவர் ஆலய பணவாளக் கோல சங்காபிஷேகம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும். (த-173)

o o o

வல்லை நெடியகாட்டு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில் மஹோற்சவத்தின் போது தினமும் மாலை 6மணிக்கு ஆலய முன்றலில் தெய்வீகப் பெருரைகள் நடைபெறும். (க-155)

o o o

கைதடி மேற்கு இணுங்கித் தோட்டம் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தேரும், தீர்த்தமும் 31ஆம் திகதி செவ்வாய் நடைபெறும்.

தினமும் மாலை 7முதல் 8மணி வரை மூத்த சமயச் சொற்பொழிவாளர், மெஞ்ஞானவாரிதி பிரம்மஸ்ரீ சபாரத்தின ஈஸ்வர சர்மாவின் தெய்வீகப் பெருரைகள் நடைபெறும்.

இன்று "வேலைத் தொழுவது எமது வேலை" என்ற பொருளில் பெருரை நிகழ்த்தப்படும். (க)

o o o

உரும்பராய் காட்டு வைரவர் கோயில் வருடாந்த சங்காபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 9-30மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். நண்பகல் அன்னதானம் இடம்பெறும். (த-154)

# இனப்பிரச்சினையின் உண்மை நிலையை நோபல் பரிசு பெற்றோர் உணரவில்லை

## அஷ்ரப் நாடாளுமன்றில் தெரிவிப்பு

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான யோசனைகளை முன்வைத்த நோபல் சமாதானப் பரிசுபெற்ற அறிஞர்கள் பிரச்சினையின் உண்மைத் தன்மையை உணர்ந்தவர்களாகத் தெரியவில்லை. விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் பேச்சுவார்த்தை நடத்தியே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று மாத்திரமே அவர்கள் கூறியுள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரான எம். எச். எம். அஷ்ரப் அண்மையில் நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு தெரிவித்ததாவது;

இனப்பிரச்சினை புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான ஒரு பிரச்சினை அல்ல. தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையில் மாத்திரம் உள்ள பிரச்சினையும் அல்ல. வடக்கு- கிழக்கில் வாழும் தமிழர், சிங்களவர், முஸ்லிம் ஆகிய மூவினத்தவரும் இரத்தம் சிந்துகின்ற ஒரு பிரச்சினை இது என்பதை உணர அவர்கள் தவறிவிட்டனர் என்றார். (த-173)

சுமுகநிலை திரும்பியுள்ளதாக

# உலகத்துக்கு காட்டவே உள்ளூராட்சித் தேர்தல்கள்

## குமார் பொன்னம்பலம் சொல்கிறார்

மண்கிண்டிமலையில் இலங்கை இராணுவம் மிக மோசமான நிலையில் தோல்வியைத் தழுவியுள்ள இவ்வேளையில் — நிலைமை பழைய சுமுக நிலைக்குத் திரும்பியுள்ளதாக உலகுக்குக் காட்டவே கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தப் போவதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் பி. பி. சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் அப் பேட்டியில் தெரிவித்ததாவது;

"வடக்கிலும், கிழக்கிலும் தேர்தல்களை நடத்த சரியான காலம் எப்போது வரும் என எனக்குத் தெரியாது. அப்படி ஒரு காலம் வராது என்பது தான் எனது தனிப்பட்ட கருத்து. ஆனால் வந்ததற்கு பிறகுதான் தேர்தல் பற்றி தீர்மானிக்கவேண்டும் என்பது எல்லோரினதும் விருப்பம்" —

"எதிர்ப்புக்களையும் மீறி உள்ளூராட்சித் தேர்தல்களை அரசு நடத்தினால் தமிழ் காங்கிரஸ் இத் தேர்தலில் கலந்து கொள்ளாது. தமிழ் மக்களும் கூட இத் தேர்தலில் கலந்து கொள்ளக்கூடாது என்பது தான் எனது தனிப்பட்ட வேண்டுகோள்" — என்றும் குமார் பொன்னம்பலம் சொன்னார். (த எ)

# தாயகம் திரும்பியோருக்கு ரயில் நிலையத்தில் கிண்டல்

கொழும்பு, ஆக. 23

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிய தமிழ் அகதிகளை வவுனியா ரயில் நிலையத்தில் திரண்டிருந்த மக்கள் கிண்டல் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த திங்கள் இரவு அகதிகளைப் பார்ப்பதற்காக வவுனியா ரயில் நிலையத்தில் சுமார் 8 ஆயிரம் பேர் திரண்டிருந்தனர். யாழ். செயலக அதிகாரிகளும் அகதிகளைப் பொறுப்பேற்க அங்கு நின்றிருந்தனர்.

மக்கள் கூட்டத்தைக் கண்டதும் அவர்கள் தம்மை வரவேற்க வந்திருப்பதாக எண்ணித் தாயகம் திரும்பியோர் மகிழ்ந்தனர். ஆனால் அவர்கள் ரயிலை விட்டு இறங்கியதும் அங்கிருந்த சிலர் அவர்களைப் பார்த்து ஏளனமாகப் பேசத் தொடங்கினர்.

மனதைப் புண்படுத்தும் கேவலமான கேள்விகளுக்கும் தாயகம் திரும்பி பெண்கள் முகம் கொடுக்கவேண்டி இருந்ததாம். இதனால் தாயகம் திரும்பிய அகதிகள் பெரும் மன வேதனை அடைந்ததாக தெரிவிக்கப்பட்டது (த-173)

# வெடிகுண்டை வீசி விட்டு கொள்ளையர் தப்பி ஓட்டம்

தேயிலைத் தொழிற்சாலை ஒன்றில் கொள்ளையடிக்க முயன்ற கோஷ்டி ஒன்று தமது முயற்சி தோல்வியடையவே வெடிகுண்டை வீசிவிட்டு தப்பியோடினர். இதில் 4ஊழியர்கள் படுகாயமடைந்தனர்.

தெனியாய வரகல தேயிலைத் தொழிற்சாலையிலேயே இக் கொள்ளை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கொள்ளையர்களை நோக்கி காசாளர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போதே கொள்ளையர்கள் வெடிகுண்டை வீசிவிட்டு ஓட்டம் பிடித்தனர். (த-173)


# COMPUTER கல்வி

**Diploma in Computer Programming**
**BASIC Language**
**4 MONTHS**

**COMMENCEMENT:**
Weekday Course: 27 08 - 1993
Weekend Course: 28 08 1993

உளச்சார்பறி சோதனை - 25 - 08 - 1993
4.00மணி

மாணவர்கள் விரும்பினால் இப் பரீட்சைக்குத் தோற்றலாம். ஆகக் கூடிய புள்ளிகள் எடுக்கும் பரீட்சார்த்திக்கு Scholorship வழங்கப்படும்.

Lectures by: S. P. SIVAPATHASUNDARAM
M. I. D. P. M. (Lond)

Fees: மாதம் ரூ. 400-/ மட்டுமே

மேலும் விவரங்களுக்கு:

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET, JAFFNA.

(இ-5818)


## 31ஆம் நாள் நினைவலைகள்



## திருமதி மோகனச்சந்திரன் ஜயனி

ஜனனம்: 30 - 05 - 1971 மரணம்: 24 - 07 - 1993

பல்கலைக்கழகப் படிப்பினை விடுத்து
பார் புகழ் கனடாப் பதியது சென்று
நல்லவர், நண்பர், உறவினர் வாழ்த்த
நவையறு காட்சித் திருமணம் நிகழ்ந்தது
ஒ........எம் ஜயனி......
திருமணம் நிகழ்ந்த இரண்டு மாதங்கள்
பூவும் பொட்டும் பொலிந்திடவிட்டு
திருமணக் கோலம் தன்னையும் விடுத்து
மோகனச் சந்திரன் முகத்தையும் மறந்து
எங்கே நடந்தாய், ஏன் நீ நடந்தாய்,
கல்வி, கலை, விளையாட்டுத் துறைகளில்
காலடி பதித்த எம் ஜயனி இன்றெங்கே!
உனது மரணம் எம்மை உலுப்பி
உயிர்களை மெல்ல மெல்ல தின்னும்,
சேதியை உனக்குச் செப்புவது எப்படி...?
ஓடி உலாவித் திரிந்த உன் முற்றம்,
உற்றவர் நண்பரை உபசரித்திட்ட
வார்த்தைகள் யாவும் வரண்டது ஏனோ?
எங்களின் வீட்டு வாசலில் ஒருமுறை
உன் சிரிப்பொலியை உதிர்த்திட வாராய்.

அம்மா, தங்கை,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(27035)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அச்சகப் பாவிப்பிற்குரிய இங்கிலாந்து தயாரிப்பான இங்கின் டெமி சிலிண்டர் மெஷின் நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு இல. 553, மே/பா உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-5818)

புதிய கீ போட் ரெமிங்டன் தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: G. R. மருதலிங்கம், இல.8/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (27034)

சகல தடுப்பு ஊசிகளும் போடப்பட்ட நிலையில் உள்ள அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 48/1, முதலாம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டு கழக ஒழுங்கை), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-5811)

புறோயிலர் இறைச்சிக் கோழிகளும் மூன்று வாரங்கள் நிரம்பிய கைலைன் வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், ஒரு வாரம் நிரம்பிய பாமாஸ், பாமாஸ் கறுப்பு, ஸ்பங்கிளர் குஞ்சுகளும் உடன் விற்பனைக்கு உண்டு. பினான் பரடைஸ், 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (27019)

### லான்ட்மாஸ்ரர்

நல்ல நிலையிலுள்ள சக்தி மிற்சுபிசி 10 HP லான்ட் மாஸ்ரர் ½கியூப் புதிய பெட்டியுடன் விற்பனைக்குண்டு. மில் பாவனைக்கு உகந்தது. தொடர்பு: இல. 48/1, முதலாம் ஒழுங்கை (ஐங்கரன் விளையாட்டுக் கழக ஒழுங்கை), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-5812)

### போட்டோ பிரதிகள்

உங்களுக்குத் தேவையான போட்டோஸ்ரற் பிரதிகள் இப்போது எங்களால் செய்து கொடுக்கப்படுகின்றன. சித்திராலயா, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-5669)

### மணமகள் தேவை

உயர் இந்து, கௌரவமான குடும்பத்தைச் சார்ந்த செவ்வாய்க் குற்றமற்ற அரச தொழில்புரியும் B. Sc. மணமகனுக்கு 30 வயதுக்கு உட்பட்ட அழகிய மணமகள் தேவை. முழுவிவரத்துடன் விண்ணப்பிக்கவும். இல. 554, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (27021)

### நன்றி

நான் தவறவிட்ட 2,500 ரூபா 21-08 93 அன்று என்னிடம் திரும்பக் கிடைத்தது. அப்பணத்தை கண்டெடுத்து எனக்கு கிடைக்க உதவியவருக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். D. திலீபன். (27036)

### பயிலுனர் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான ஸ்ருடியோ ஒன்றிற்கு ஸ்ருடியோ வேலை பழக ஆர்வமுள்ள 15—20 வயதிற்குட்பட்ட ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவு திகதி: 31 - 08 - 1993. மே/பா 914, உதயன். (சி-5674)

### CAKE ICING CLASS

Cookery, Cake Icing புதிய வகுப்புக்கள் 28-8 93 சனிக்கிழமை முதல் ஆரம்பமாக உள்ளன. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். Yogi Home science Academy, 71, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட், நல்லூர், யாழ்ப்பாணம். (27017)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உரிய விடை உடனே கிடைக்கும். த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (27008)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

பெண்கள் அணியும் கைக்கடிகாரம் ஒன்று சென்ற மாதம் ஆஸ்பத்திரி வீதி—கோயில் வீதி சந்தியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். இல. 824, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (27027)

### புலோலியில் நீமியா

பண்வளம் பெருக்கிப் பயிர் பாதுகாப்பும் தருவது 'நீமியா உரம்' வேப்பம் பிண்ணாக்கை ஆதாரமாகக் கொண்டது. கிலோ பக்கற் ஒன்று ரூபா18/- வடமராட்சியில் புலோலி சமநல சேவை நிலையத்தில் விற்பனையாகிறது. ''மில்க்வைற்'' (சி-5814)

## சீனி விலை அதிகரிப்பு

யாழ். மாவட்டத்தில் சீனியின் விலை 2 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் சீனி கிலோ 30 ரூபாவுக்கே சீனியை விற்பனை செய்யும்.

எனினும் பழைய கையிருப்பு முடிவடையும் வரை சீனி பழைய விலைக்கே விற்கப்படும் என யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது. (இ-17)

## யாழ். பல்கலை. பட்டமளிப்பு செப்டெம்பர் 11ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஆக. 23

யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு வைபவம் அடுத்த மாதம் 11 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா பட்டமளிப்பை நடத்தி வைப்பார்.

இம்முறை மூன்று அரங்குகளாக நடைபெறும் இவ்வைபவத்தில் 600 பட்டதாரிகள் பட்டம் பெறவிருக்கின்றனர்.

பட்டமளிப்பு விழாவையொட்டிய நினைவுச் சொற்பொழிவுத் தொடரில் —

திருவாட்டி இராமநாதன் ஞாபகார்த்த பேருரையை இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் 14 ஆம் திகதியும் —

சேர். பொன். இராமநாதன் ஞாபகார்த்த பேருரையை முகாமைத்துறைத் தலைவர் திரு. எஸ். நடராஜசுந்தரம் 13 ஆம் திகதியும் — வழங்குவர்.

பல்கலைக்கழக மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் 12 ஆம் திகதி நடைபெறும். (த-3)

## முதலுதவிபயிற்சி

யாழ்ப்பாணம், ஆக. 23

யுனிசெப் உதவியுடன் யாழ். மாநகராட்சி மன்றத்தால் நடத்தப்பட்டு வரும் பல்வேறு சுகாதாரக் கல்வித் திட்டங்களின் ஓர் அங்கமான பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான முதலுதவி பயிற்சி நெறியின் ஆரம்ப வைபவம் இன்று திங்கள் காலை 9 மணிக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இப்பயிற்சி நெறி எதிர்வரும் 27ஆம் திகதி வரை நடைபெறும். (த)


Radio and Electronic Technician Course

காலம் 3 மாதம்

மிகக் குறைந்த தவணைக் கட்டணம்

★ விசேட செய்முறைப் பயிற்சிகள்
★ இலகு விரிவுரைகள்
★ பயிற்சி முடிவில் தகுதிவாய்ந்த சான்றிதழ்

ஆரம்பம்: 01 - 09 - 1993

விபரங்களுக்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. Peter's Lane, Jaffna.
(சி-5680)



விசேட கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்கள்

Introduction to Computer and BASIC Language

ஆரம்பம்: 05 — 09 — 1993
காலம்: 4மாதம்

"உங்கள் உயர் கல்வியை எதிர்காலத்தில் இலகுவாக தொடரும் வண்ணம் கம்பியூட்டர் பயிற்சி வகுப்புக்களில் இணைந்து கொள்ளுங்கள்"

உங்களின் நலன்கருதி:
★ திங்கள், புதன், வெள்ளி — 3-00 — 4-00
சனி, ஞாயிறு — 3-00 — 4-00
★ தவணை முறையிலான குறைந்த கட்டணம்
★ தமிழ் விளக்கத்துடன் கூடிய இலகுவான விரிவுரைகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சியும், பயிற்சியின் முடிவில் தகுதி வாய்ந்த சான்றிதழும்.

விவரங்களுக்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14 St. Peter's Lane, Hospital Road,
JAFFNA.
(சி-5679)


## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்

### சி. சு. சின்னத்தம்பி

[முன்னாள் கைதடி கிராமிய வங்கி முகாமையாளர்]

மலர்வு: 10 — 05 — 1929
உதிர்வு: 02 — 09 — 1992

திதி! 23 — 08 — 1993

ஆண்டு கழிந்தாலும் - உங்கள்
அன்பு கலையவில்லை
மீண்டும் வணங்குவோம் - உங்கள்
மேன்மையை வாழ்த்துவோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், உறவினர்கள்.

தெய்வபதி,
கைதடி தெற்கு,
கைதடி.
(26988)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 25 — 08 — 1950
மறைவு: 02 — 09 — 1992


### திருமதி சிவநேசன் பரமேஸ்வரி

"சீவியத்தில் நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்"

கணவர், பிள்ளைகள், மாமன்.

சிவா சைக்கிள் வேக்ஸ்,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.
(6629)

## 21ஆவது ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம்: 10 — 04 — 1935
மரணம்: 23 — 08 — 1972

### குலசிங்கம் கந்தையா (B. Sc.)

(விஞ்ஞான ஆசிரியர், வேலாயுதம் மகாவித்தியாலயம்)

திதி: 29 — 8 — 1993

விண்ணுலக வாழ்வில் மூவேழு ஆண்டுகள்
முடிந்தாலும்
மண்ணுலக வாழ்வில் முப்பத்தேழாண்டுகள்
இருந்ததை மறக்க முடியுமா?

ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்;
தாய், மனைவி, மக்கள்,
மருமக்கள், மாமி, பேரன்.

"இந்திர கிரி"
இரும்பு மதவடி,
சரவெட்டி.
[6398]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அரசமைப்பதில் புதிய அத்தியாயம்

தமிழீழத்தின் முதலாவது நீதிமன்றம் நேற்று முன்தினம் சுன்னாகத்தில் திறக்கப்பட்டு, வழக்கு விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

குடாநாட்டைத் தொடர்ந்து வன்னியிலும் தமிழீழ நீதிமன்றங்கள் அமைக்கப்பட உள்ளன.

தமிழீழ நீதித்துறைக்கெனத் தனியான, தனித்துவமான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. சட்டக்கோவை வெளியிடப்பட்டுள்ளது. தமிழீழத்துக்கான நீதியாளர்களும், சட்டவாளர்களும் தேசியத் தலைவர் பிரபாகரனின் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர். அவர்களுக்கான நீதித்துறைக் கல்வியும், பயிற்சியும் இங்கேயே வழங்கப்பட்டன.

ஈழத்தமிழர் தமக்கென ஓர் அரசை அமைப்பதற்காக, அதற்கு முன்னரே அதற்குரிய அடித்தளக் கட்டுமானங்களை அமைத்து வருகின்றனர்.

அந்த வகையில், நிர்வாக, பொருளாதாரத் துறைகளில் பெரும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இப்போது நீதி நிர்வாகத் துறையும் நிறுவப்பட்டிருப்பது மற்றொரு புதிய அத்தியாயமாகும்.

நாட்டை, அரசை அமைத்த பின்னர் வேண்டிய உட்கட்டமைப்புகளை உருவாக்கி நாட்டைக் கட்டியெழுப்புவது ஒரு முறை. உட்கட்டமைப்புகளை திட்டமிட்டு நிர்மாணித்துக் கொண்டு நாட்டைக் கட்டிஎழுப்புவது இன்னொருமுறை. இதில் இரண்டாவது, தேச நிர்மாணத்தை வலுவடையச் செய்வது மட்டுமன்றி, சுதந்திரத்துக்கு விரைந்தும் விடாமுயற்சியுடனும் உழைக்க வேண்டும் என்ற உந்துதலையும் மக்களுக்குத் தரும்.

இந்த இரண்டாவது முறையைத் தேர்ந்து செயற்படுத்துவது தலைவர் பிரபாகரனின் தமிழீழத் தேச நிர்மாணத்துக்கான முன்னோக்கையும், தீர்க்கதரிசனத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. அவரது இந்த ஆழ்ந்த மதிநுட்பம் அவர் உலகம் வியக்கும் தலைசிறந்த இராணுவத் தளபதி மட்டுமல்லர்; ஒப்பற்ற தேசத் தலைவருமாவார் என்ற மகுடத்தையும் சூட்டி நிற்கிறது.

தமிழீழப் பிரதேசங்களில் சிறிலங்கா அரசின் ஆணையும், ஆட்சியும் நலிந்து போயிற்று என்பதை உலகத்துக்கு மேலும் சான்றுபகரும் விதத்தில் நீதித்துறை உருவாக்கம் அமைந்திருக்கிறது. ஓர் அரசின் இரண்டு கண்கள் போன்றவை நிர்வாகத் துறையும், நீதித் துறையுமே.

தமிழீழத்தில் அவை இரண்டும் நிறுவப்பட்டு விட்டதால் அது ஒரு தனி அரசாகவும் நாடாகவும் ஆகிவிட்டது என்று சொன்ன இடமுண்டு. இதனை வெளி உலகம் சிலாகித்துப் பேசும் என்பது நிச்சயம். அது மட்டுமன்றி இந்த வளர்ச்சி நிலை, சிறிலங்கா அரசின் தோல்வியைச் சரியாக எடைபோடவும் பெரிதும் உதவும்.

ஈழத் தமிழர் பிரச்சினை சர்வதேசயமப்பட்டு வரும் இவ்வேளையில், தமிழர்களின் சொந்த நிர்வாகத்துறை நீதித்துறை என்பன இங்கே இயங்குவது தமிழர் போராட்டத்துக்கு மேலதிக புள்ளிகளைப் பெற்றுத் தரும்.

நீதித்துறை நிறுவப்பட்டால் மட்டும் போதாது. அது செவ்வனே இயங்கி மக்களுக்கு நீதி வழங்க வேண்டும். நீதியாளர்கள், சட்டவாளர்கள் பதவிப் பிரமாணத்தின் போது தலைவர் பிரபாகரன் வழங்கிய அறிவுரைக்கேற்ப தமிழீழ நீதித்துறை தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சமூக நீதியை நாட்ட வேண்டும்.

## கல்விக் கல்லூரி அனுமதி

யாழ்ப்பாணம், ஆக. 23

வவுனியாவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் கல்விக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பது சம்பந்தமான விவரங்களும், அறிவுறுத்தல்களும் யாழ்ப்பாணம் கல்வி அலுவலகத்துக்கு நேற்று வந்து சேர்ந்துள்ளன.

இக்கல்லூரியில் சேர்வதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தேவையான விவரங்களை யாழ். கல்வி அலுவலகத்தில் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

விண்ணப்ப முடிவு திகதி செப்டம்பர் மாதம் 2ஆம் திகதியாகும். (அ-3)

## ஓராண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஆக. 23

சித்தன்கேணி கல்வி வளர்ச்சிக்கழக ஓராண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 3 30 மணிக்கு நடைபெறவுள்ளன. மேற்படி நிகழ்ச்சிகள் விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பின் பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பொறுப்பாளர் திரு. சி. தமிழ்மறவன் தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக பண்டத்தரிப்பு கல்வி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதியும், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் யாழ். மாவட்ட மகளிர் பொறுப்பாளர் செல்வி வாசுகியும் கலந்து கொள்வர்.

இரவு 7 30 மணியளவில் வி. பு. மாணவர் அமைப்பின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (ஓ)

## பளை கொத்தணி பாடசாலைகள்

யாழ்ப்பாணம், ஆக. 23

பளைக் கொத்தணிப் பாடசாலைகள் நாளை மறுதினம் புதன்கிழமை மூன்றாம் தவணைக்காக ஆரம்பிக்கப்படுகின்றன என்று பளை கொத்தணி அதிபர் திரு. க. புண்ணியசீலன் அறிவித்துள்ளார். (ஓ)

## பதிவு செய்து கொள்ளலாம்

யாழ்ப்பாணம், ஆக. 23

வன்னி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து வந்து யாழ். குடாநாட்டில் வசிக்கும் மாவீரர்களின் பெற்றோர்களும் — இராணுவ நடவடிக்கை மற்றும் பிற காரணங்களினால் யாழ். குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வசிக்கும் மாவீரர்களின் பெற்றோர்களும் தங்கள் வதிவிடத்திற்கு அண்மையில் உள்ள கோட்ட, வட்ட சிற்றூர்பணிமனைகளில் தமது குடும்ப விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல்துறைச் செயலகம் அறிவித்துள்ளது. (த-111)

## தொழிற்சாலை மூடப்பட்டது

கொழும்பு, ஆக.23

நிவித்திகலையில் அமைக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலை ஒன்று கடந்த வியாழக்கிழமை முதல் மூடப்பட்டது.

ஜூலை மாதச் சம்பளம் வழங்கப்படாததை அடுத்து அங்கு பணியாற்றும் 305 பணியாளர்களும் கடந்த 14ஆம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

சம்பளம் வழங்கப்படும் என பணியாளர்களுக்கு உறுதியளித்த நிர்வாகத்தினர் அவர்களின் கையொப்பங்களை ஓர் ஆவணத்தில் பெற்று பின்னர் தொழிற்சாலை மூடியதாகத் தெரிவிக்கப்பட்டது. [த-6]

# கண்டிய மன்னர்களில் பலரும் தமிழில் கருமங்கள் ஆற்றினர்

## சாகித்திய விழாவில் ரணில்

கொழும்பு, ஆக. 23

''1850 ஆம் ஆண்டுகளில் கண்டிய மன்னர்களில் பலர் தமிழ் மொழியில் தமது கருமங்களை ஆற்றினார்கள்''

பிரதமர் ரணில் விக்கிரசிங்க இவ்வாறு கூறினார்.

கொழும்பில் கடந்த வெள்ளிக் கிழமை தேசிய தமிழ் சாகித்திய விழாவை ஆரம்பித்து வைத்து பேசிய போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரதமர் மேலும் கூறியதாவது:-

இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் தமிழ்மொழி அரசகரும மொழியாக இருக்கிறது. பல மொழிகள் உள்ள நாடுகளில் தமிழ்மொழியும் அந்தஸ்து பெற்று விளங்குவது தமிழர்களுக்கு பெருமை தரும் விடயமாகும்.

எமது நாட்டைப் பொறுத்தவரை தமிழ், சிங்கள இன மக்கள் இடையே மொழிப் புரிந்துணர்வை ஏற்படுத்தி, சகோதர உணர்வுடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் சொன்னதாவது:-

இந்நாட்டில் இன்றைய நிலை தோன்றுவதற்கு 1956 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டதே காரணம் ஆகும்.

ஆனால் இப்போது நிலைமை மாறி வருகிறது — என்றார். (ஓ)

## பரீட்சைக்கு பயிற்சி வகுப்பு

எழுதுவினைஞர் ''2 - அ'' தரத்துக்கான பதவி உயர்வுப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் இருபதாம் திகதி நடைபெற உள்ளது. பிரஸ்தாப பரீட்சைக்குத் தோற்றுவோரின் நலன் கருதி உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் யாழ். மாநகர சபையில் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது. சனி, ஞாயிறு தினங்களில் இந்த வகுப்புகள் நடைபெற்று வருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## 5 குளங்கள் புனரமைப்பு

அராலி ஆக. 23

வலி மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஐந்து விவசாயக் குளங்கள் ஆழமாக்கப்பட்டுள்ளன. இதற்கான செலவை அப்பகுதி விவசாயிகளும் போரும் நிறுவனமும் பொறுப்பேற்று வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

பொன்னாலை இலவக்குளம், அராலி மத்தி கணவக்கைகுளம், அராலி வடக்கு பண்டியாவத்தை குளம், சங்கரத்தை குளம், சங்கானை பேய்குளம் ஆகியவை ஆழமாக்கப்பட்டுள்ளன. (த-12)

# தேசியக் கலையான கூத்தை மக்கள் பாதுகாத்தனர்

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் உரை

''தமிழரின் தேசியக் கலையான கூத்து பாமர மக்களால் பாதுகாக்கப்பட்டு வந்தது இன்று பட்டம் பெற்றவர்களும் பதவிநிலை உத்தியோகத்தர்களும் கூத்தை எடுத்துச் சென்று மக்களிடம் பெரும் செல்வாக்கைப் பெற்று வருகின்றார்கள், இதுவும் ஒரு மறுமலர்ச்சியே''

நாட்டுக் கூத்துக் கலைஞர் திரு. செல்லையா மெற்றாஸ் மெயில் அவர்களின் சேவையைப் பாராட்டி அண்மையில் யாழ். புனித மரியாள் கல்லூரியின் முத்தமிழ் விழாவின் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவருக்குப் பொன்னாடை போர்த்து விருது வழங்கிய யாழ். கல்வித்திணைக்கள பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் ''மக்கள் கலையைப் பயின்று அதை மக்களுக்குத் திருப்பிக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் திரு. மெற்றாஸ் மெயிலின் சேவை பாராட்டுக்குரியது! என்று கூறினார்.

இந்த விழாவில் திரு. மெற்றாஸ் மெயிலின் நெறியாள்கையிலான ''காத்தவராயன் கூத்து'' அரங்கேற்றப்பட்டது. (க)

### எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர்

# நேர்முகப் பரீட்சை இவ்வாரம் நடக்கும்

மாகாணசபைக்குட்பட்ட திணைக்களங்களில் எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர் பதவிகளை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட 200 பேருக்கான நேர்முகப் பரீட்சை இவ்வாரம் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சையை இங்கு நடத்துவதற்காக திருமலையில் இருந்து மூன்று அதிகாரிகள் நேற்று முன்தினம் யாழ். வந்துசேர்ந்தனர்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளோருக்கான அழைப்புக் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும் என்றும் —

நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடம், நேரம் போன்ற விவரங்கள் இன்று அறிவிக்கப்படும் என்றும் —

நேர்முகப் பரீட்சையை இங்கு நடத்தவுள்ள வடக்கு கிழக்கு மாகாணசபையின் உள்ளூராட்சி ஆணையாளர் திரு சபாபதிப்பிள்ளை தெரிவித்தார்.

# சித்தர்களைப் பற்றி நமது சமுதாயம் தெரிந்து கொள்ள வேண்டும்

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஆக. 23

''யாழ்ப்பாணத்துக்குப் பெருமை தேடித்தந்த உயர்ந்த சித்தர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி நமது சமுதாயம் தெரிந்து கொள்வது அவசியம்''

கைதடி ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் ஆச்சிரமத்தில் நடைபெற்ற ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகள் நூல் வெளியீட்டு விழாவில் ஆய்வுரை நிகழ்த்திய பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாறு கூறினார்.

திரு. ஆ. சந்தையா ஜே. பி. தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் தொடர்ந்து பேசிய அவர்,

''இந்த நூல் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளுடன் தொடர்பு கொண்டவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது என்பதால் சித்தர் பரம்பரையை அறியக்கூடிய ஒரு வரலாற்று நூலாக அமைந்துள்ளது'' என்று கூறினார்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு உரையாற்றிய சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ''ஞானத்தையே ஒரு மார்க்கமாகக் கொண்டு அருள்வாழ்வு வாழ்ந்த துறவியின் வரலாற்றை எடுத்துக்காட்டும் இது போன்ற நூல்கள் மேலும் பல வெளிவர வேண்டும் [illegible]

தவத்திருசோமாஸ்கந்த சுவாமிகள் தமது ஆசியுரையில் ''சச்சிதானந்த சுவாமிகளின் வாழ்க்கையையும் ஆன்மீகத் தொண்டுகளையும் காலம்காலமாக உரை இந் நூல் உதவும்'' என்று கூறினார்.

பிரம்மஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள், பிரம்மஸ்ரீ இ. சிவராமலிங்கக் குருக்கள், சிவநெறிப்புலவர் ச. நமசிவாயம், திருமதி அ. தவமலர், திரு. இ. குழந்தைவடிவேல், திரு. சு. விக்கினேஸ்வரன் உட்பட பலர் பேசினார்கள்.

ஆசிரமக் கொடியை செல்லம்மா அம்மையார் ஏற்றி வைத்தார். மங்கல இசை நிகழ்ச்சியை அடுத்து சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் திரு. க. சந்திரசேகரா மங்கல விளக்கேற்றினர்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியிடம் இருந்து நூலின் முதற்பிரதியை திரு தா. நவனகுமார் பெற்றுக் கொண்டார் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை சாவகச்சேரி பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு பொ. வீரபத்திரன் வழங்கினார். சுவாமிகளின் பாடல் இசைக் கச்சேரியும் இடம்பெற்றது (க-111)


தெல்லிநகர் ஸ்ரீ துர்க்காதேவி உற்சவ காலச் சிறப்பம்சம்

**அற்புதம் அருளும் துர்க்காதேவி**

கல்விவளம் கலையின்வளம் அனைத்தும் சேரக்
கவின்செய்யும் தெல்லிநகர் அதனில்மேவிச்
சொல்லரிய அற்புதங்கள் பலவும் காட்டித்
தொழுவோர்க்கு நலன் அருளும் துர்க்காதேவி
பல்லோரும் தொழும் வண்ணம் வீதி தன்னில்
பவனிவரும் விழாச்சிறப்பைக்-
காண்போர்க்கெல்லாம்
நல்லனவே வந்தெய்தும் முன்செய் பாவம்
நலிவெய்தும் அமைதியே தொடர்ந்துகொள்ளும்.

– சங்கானையூர் நா. சபாரத்தினம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சந்தியாப்பிள்ளை இராசம்மா

கரவெட்டி முன்னாள் தபால் அதிபரின் அன்பு மனைவி திருமதி சந்தியாப்பிள்ளை இராசம்மா (22-08-1993) அன்று காலமாகிவிட்டார்.

இவர் ஓய்வுபெற்ற தபால் அதிபர் திரு. வஸ்தியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளையின் அன்பு மனைவியும், திருமதி A. பிரேமா, விக்ரர் செல்வராசா (லண்டன்), அருட்திரு S. V. B. மங்களராசா (கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடம்), S. V. F. இரட்ணராசா (நியூசிலாந்து), திருமதி A. T. ஜெஜிந்தா ஜெயசீலி (ஆசிரியை, வதிரி திருஇருதயக் கல்லூரி), S. V. C. புனிதராசா (கனடா), Dr. S. V. J. ஞானராசா (Base Hospital குருநாகல்), ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. R. E. ஆனந்தராசா (பிரேமா றேடர்ஸ், நெல்லியடி), திரு. M. A. தவரத்தினராசா (ஆசிரியர், புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை, போதனாசிரியர் தொலைக்கல்வி மத்திய நிலையம், கரவெட்டி), திருமதி V. ஜெனிவி (லண்டன்), திருமதி இ. கிருபாகரி (நியூசிலாந்து), திருமதி P. யூடி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், மஞ்சுசிக்கா, சந்திரிக்கா, தர்ஷிக்கா, டொமினிக், றெனி, ஜோண், யூலியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திரு. சந்தியாப்பிள்ளை இராஜையா, அருட்செல்வி வெற்றீசியா (திருக்குடும்பக் கன்னியர் மடம், யாழ்ப்பாணம்), திருமதி ம. றோசம்மா, திருமதி வ. ஞானம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருட்செல்வி ஜோசவின் (அதிபர், யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்-ஆங்கிலப் பாடசாலை), அருட்செல்வி மாறியூடித் (கார்மலைற் மடம், மூதூர்) ஆகியோரின் அன்பியும், அருட்செல்வி S. ஜோசப்பின் (வவுனியா, திருக்குடும்பக் கன்னியர் மடம்) அவரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக திருப்பலியின் பின் கரவை கீகிப்பல்லி சேமக்காலைக்கு நாளை (24-08-1993) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. வ. சந்தியாப்பிள்ளை
(ஓய்வு பெற்ற தபால் அதிபர்)

தபாற் கந்தோர் எதிர்,
கரவெட்டி.
(27033)

## திருமதி தனலட்சுமி குமாரசாமி

திருமதி தனலட்சுமி குமாரசாமி (ஆசிரியை, கோண்டாவில் CCTM பாடசாலை) 22-08-1993 இல் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிரேசனடியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. த. குமாரசாமியின் (யாழ். கச்சேரி உணவுத் திணைக்களம்) அன்பு மனைவியும், செல்விகள் நிஷனி, சுபானி, றேசினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், திரு. திருமதி சங்கரப்பிள்ளை, அன்னம் (வடலியடைப்பு) அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி தம்பிப்பிள்ளை செல்லம்மா அவர்களின் மருமகளும், சண்முகம்பிகை, இராசபூபதி, நற்குணேஸ்வரி (கனடா), குணராசா (கனடா), தவரூபி, ரவீந்திரராசா (கனடா) ஆகியோரின் சகோதரியும், திருமதி நாகேஸ்வரி கனகலிங்கம், திருமதி பரமேஸ்வரி நாகலிங்கம் ஆகியோரின் மைத்துனியுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-08-93) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12மணியளவில் கோண்டாவில் கிழக்கு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. குமாரசாமி (கணவன்)

நந்தாவில் அம்மன் கோயில் வீதி,
கிரேசன் முன்பாக,
கோண்டாவில்.
(27038)

## வைரவப்பிள்ளை சின்னத்தம்பி

(அப்பா அண்ணை)

கொல்லன் கலட்டி

சுழிபுரம் - மேற்கை வதிவிடமாக கொண்ட காலம் சென்ற முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும், துரைசிங்கம், தவபாலசிங்கம் (குஞ்சா) ஆகியோரின் அன்புத் தந்தையுமாகிய இவர் 22-08-93 ஞாயிறு மு. ப. 6.45 மணியளவில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று பி. ப. 5.00 மணியளவில் சுழிபுரம் திருவடிநிலை மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்

சுழிபுரம் மேற்கு.
(27043)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 23-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## மாவீரர்களுக்கு மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஆக. 23

தென்மராட்சிப் பகுதியில் வெள்ளியன்று எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவு அடைந்த எட்டு வீரவேங்கைகளில் —

முல்லைத்திவு மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டாம் லெப்டினன்ட் வீரமணி, இரண்டாம் லெப்டினன்ட் வள்ளுவன் ஆகியோரின் வித்துடல்கள் முள்ளியவளையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

அஞ்சலி நிகழ்வை அடுத்து பாண்ட் வாத்திய இசை, இராணுவ மரியாதைகளுடன் இம்மாவீரர்களின் வித்துடல்கள் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டன. (ஓ-3)

## சிறில் ரணதுங்கா பதவியேற்பு

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா இம்மாதம் 16 ஆம் திகதி முதல் இலங்கையின் பிரிட்டிஷ் தூதராக பதவியேற்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## யாழ். பல்கலை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை ரீதியாக நடைபெற்ற பரீட்சைகளின் புள்ளிப் பெறுபேறுகளிலும் பார்க்க —

1993 ஏப்ரலில் வடக்கு - கிழக்கில் நடைபெற்ற பரீட்சையின் புள்ளிப் பெறுபேறுகள் மிகவும் குறைவாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இரு பரீட்சைகளையும் ஒன்றாகக் கணித்து அதனடிப்படையில் —

தேசியமட்டத்தில் திறமை அடிப்படையில் தெரிவாவோரை பட்டியலிட்டால், அதில் வடக்கு - கிழக்கைச் சேர்ந்தோர் எண்ணிக்கை மிக மிகக் குறைவாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### மாணவர் எண்ணிக்கை வீழ்ச்சி

இதனால் —

தேசிய மட்டத்தில் திறமையடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட — மிகக் குறைந்த எண்ணிக்கையான — தமிழ் மாணவர்களையும், மாவட்ட அடிப்படையில் தெரிவான தமிழ் மாணவர்களையும் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கும்போது, அது யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தேவையான எண்ணிக்கையை எட்டவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சிக்கலை எவ்வாறு சமாளிப்பது என்பது தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தற்சமயம் ஆராய்ந்து வருவதாகவும் —

பெரும்பாலும் அடுத்தமாத முற்பகுதியில் வெட்டுப்புள்ளி விபரத்தை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வெளியிடலாம் என்றும் — விடயமறிந்த வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. (க-8)

## கைதிகளின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கு எடுத்துரைத்தனர்.

இந்த விவகாரத்தில் திருமதி பண்டார நாயக்கா தலையிட்டு தமது பிள்ளைகளை மீட்டுத்தர உதவ வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

யுத்தக்கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறுதாம் நாடாளுமன்றத்தில் கோரிக்கை எழுப்ப விரும்புவதாக அவர்களிடம் திருமதி. சிறிமாவோ பண்டார நாயக்கா தெரிவித்தார்.

யுத்தக் கைதிகள் விடுதலை விவகாரம் முழுக்க, முழுக்க அரசின் விடயம் என்றாலும் ஜனாதிபதியுடனும், செஞ்சிலுவைச் சங்கசர்வதேசக்குழு அதிகாரிகளுடனும் இதுபற்றி பேசி நல்லது நடக்க உதவு வேன் என்றும் கூறியுள்ளார். (உ-3-173)

## அமைச்சு செயலாளருடனும் கைதிகள் உறவினர் சந்திப்பு

யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த பின் கொழும்பு திரும்பிய யுத்தக் கைதிகளின் உறவினர்கள் கடந்த வாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் வால்டர் பெர்னாண்டோவை சந்தித்து தங்கள் பிள்ளைகளின் விடுதலைக்காக நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர்.

கொழும்பு சென்ற கைதிகளின் உறவினர்கள் ஜனாதிபதியைச் சந்திக்க எடுத்த முயற்சி பலனளிக்காததைத் தொடர்ந்தே அவர்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை சந்தித்துப் பேசியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை — யுத்தக் கைதிகளை விடுவிக்க அரசு எதுவித நடவடிக்கையையும் எடுக்காமல் இருப்பதை அடுத்து அரசுக்கு எதிரான வெகுஜன போராட்டங்களை நடத்த யுத்தக் கைதிகளின் உறவினர்கள் ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெகுஜன இயக்கம் ஒன்றை அமைக்கும் முயற்சியிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். என்று அறிய வருகிறது. (ஓ-5)

## மட்டக்களப்பு மக்களுக்கு நிவாரணம் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஆக. 23

இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் தங்கியிருக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இடம்பெயர்ந்தோர் நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூன் மாதத்துடன் நிவாரண விநியோகம் முற்றாக நிறுத்தப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

## ஐ. நா. அதிகாரிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரியில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இறங்குதியின் இரு பக்கங்களிலும் இராணுவ சோதனை நிலையங்கள் அமைக்கப்படும். அந்த இரண்டு சோதனை நிலையங்களுக்கும் அருகில் ஐ. நா. கண்காணிப்பு அலுவலகங்கள் அமைக்கப்படும். அரச படையினர் பயணிகளையும், பொருள்களையும் சோதனையிடுவதை ஐ. நா. அதிகாரிகள் கண்காணிப்பர் —

அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியினூடாக பிரயாணிகள் செல்லும்போது ஐ. நா. தூதரக அதிகாரிகள் பாதுகாப்பு வழங்குவர் —

ஐ. நா. அதிகாரிகளையோ பயணிகளையோ ஆபத்துக்கு உள்ளாக்கும் வகையிலான இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறும் பட்சத்தில் அதுபற்றி வேலை நாட்களாயின் 24 மணிநேர முன்னறிவித்தலும், வார இறுதி நாட்கள் அல்லது விடுமுறை நாட்களாயின் 60 மணித்தியால முன்னறிவித்தலும் அரச படைகளினால் கொடுக்கப்படவேண்டும் —

ஐ. நா. தூதரகம் பூநகரிப் பகுதியில் அதன் உத்தியோகத்தர்களையும், வாகனஓட்டுநர்களையும், அமைய அடிப்படையிலான தொழிலாளர்களையும், அலுவலகம் ஒன்றையும், எரிபொருள் களஞ்சியம் ஒன்றையும் ஏனைய அத்தியாவசிய சேவைகளையும் வைத்திருக்கும் —

தாம்போதி ஊடாகப் பிரயாணிகளையும் பொருள்களையும் ஏற்றிச் செல்லும் படகுப் பாதைகளில் ஐ. நா. கொடி பறக்கவிடப்படும். —

இவற்றுக்கான இணக்கம் அரசாங்கத்துடன் காணப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

சங்குப்பிட்டியை பாவிப்பதற்கு வசதியாக தாம்போதியில் வடபகுதியையும் அதிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் வீதியையும் திருத்தி அமைக்கும் வேலைகளை யாழ். அரச அதிபர் பொறுப்பேற்பார் என்றும் —

தாம்போதியின் தெற்குக் கரையையும், கிளிநொச்சி வரையிலான வீதியைத் திருத்தி அமைக்கும்வேலையை கிளிநொச்சி அரச அதிபர் பொறுப்பேற்பார் என்றும் — அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-178)

## கெற்பலியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டிருந்த சில லொறிகளும் சேதமுற்றன.

கரைக்கு அண்மித்துக் காணப்பட்ட படையினரின் படகுகளை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தித் துரத்தியடித்ததாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

படையினர் ஏவிய ஷெல்லினால் இளாலிக் கரையில் ஒரு வீடு முற்றாக எரிந்து நாசமானது

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் விழுந்த ஷெல்லினால் மகேந்திரகுமார் தவராஜா (மூன்றரை வயது) என்ற குழந்தையும் மற்றும் இரு பெண்களும் உயிரிழந்தனர் உதயகுமார் (வயது 15) என்ற இளைஞர் உட்பட மற்றும் சிலர் காயமடைந்தனர். (உ-9 117)

# மரண அறிவித்தல்

## கந்தசாமி கண்ணதாசன்

(அன்பு)

மீசாலை வடக்கைச் சேர்ந்த கந்தசாமி கண்ணதாசன் (அன்பு) அவர்கள் 21-08-93 அன்று வீரமரணம் அடைந்துள்ளார்.

இவர் கந்தசாமி - அழகம்மா (வர்த்தகர்) தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், பிறேமதாசனின் (சுவின்) சகோதரனும் ஆவார்.

இறுதி அஞ்சலி நிகழ்வு இன்று (23-08-93) மாலை நடைபெறும்.

தகவல்:
ஆ. செல்வராஜா
(முருகன் களஞ்சியம்)

மீசாலை வடக்கு,
மீசாலை.
(27041)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org